GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

No. of Printed Pages : **12**

342177

**8236**

பதிவு எண்
Register Number

# Part - III

# சமூக அறிவியல் / SOCIAL SCIENCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

**X - JULY 2024**

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

Time Allowed : 3.00 Hours ] [ Maximum Marks : 100

**அறிவுரைகள் :**

(1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறைபாடு இருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

**Instructions :**

(1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **நான்கு** பகுதிகளைக் கொண்டது.

**Note :** This question paper contains **four** Parts.

## பகுதி - I / PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **14x1=14**

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார் ?

(அ) லெனின் (ஆ) மார்க்ஸ்

(இ) சன் யாட் சென் (ஈ) மா சே துங்

Who said "Imperialism is the highest stage of Capitalism" ?

(a) Lenin (b) Marx

(c) Sun Yat-Sen (d) Mao Tse-tung

2. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது ?

(அ) கவாசாகி (ஆ) டோக்கியோ

(இ) ஹிரோஷிமா (ஈ) நாகசாகி

Where did the US [United States] drop its first atomic bomb ?

(a) Kavashaki (b) Tokyo

(c) Hiroshima (d) Nagasaki

3. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது ?

(அ) 1827 (ஆ) 1829

(இ) 1826 (ஈ) 1927

In which year was Sati abolished ?

(a) 1827 (b) 1829

(c) 1826 (d) 1927

4. 'நிலம் கடவுளுக்குச் சொந்தம்' என்று அறிவித்ததுடன் 'நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது' என்று கூறியவர் யார் ?

(அ) டிடு மீர் (ஆ) சித்து

(இ) டுடு மியான் (ஈ) ஷரியத்துல்லா

Who declared that "Land belongs to God" and "Collecting rent or tax on it was against divine Law" ?

(a) Titu Mir (b) Sidhu

(c) Dudu Mian (d) Shariatullah

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

5. அமிர்தசரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின்போது கைது செய்யப்பட்டவர் யார் ?

(அ) மோதிலால் நேரு (ஆ) டாக்டர் சைஃபுதின் கிச்லு

(இ) முகம்மது அலி (ஈ) ராஜ் குமார் சுக்லா

Who was arrested during the anti-Rowlatt Act protests in Amritsar ?

(a) Motilal Nehru (b) Dr. Saifuddin Kitchlew

(c) Mohammad Ali (d) Raj Kumar Shukla

6. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி ________ என அழைக்கப்படுகிறது.

(அ) கடற்கரை (ஆ) தீவு

(இ) தீபகற்பம் (ஈ) நீர்ச்சந்தி

A landmass bounded by Sea on three sides is referred to as ________.

(a) Coast (b) Island

(c) Peninsula (d) Strait

7. ஆறுகளின் மூலம் உருவாகும் மண் :

(அ) செம்மண் (ஆ) கரிசல் மண்

(இ) பாலை மண் (ஈ) வண்டல் மண்

The Soil formed by the rivers is :

(a) Red Soil (b) Black Soil

(c) Desert Soil (d) Alluvial Soil

8. "தென்னிந்தியாவின் மான்செஸ்டர்" என்று அழைக்கப்படும் நகரம் :

(அ) சென்னை (ஆ) சேலம்

(இ) மதுரை (ஈ) கோயம்புத்தூர்

The city which is called as the "Manchester of South India" is :

(a) Chennai (b) Salem

(c) Madurai (d) Coimbatore

[ திருப்புக / Turn over

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

9. __________ போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் இணைக்கிறது.

(அ) இரயில்வே (ஆ) சாலை (இ) வான்வழி (ஈ) நீர்வழி

__________ transport provides door to door services.

(a) Railways (b) Roadways (c) Airways (d) Waterways

10. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் __________ ஆகும்.

(அ) ஆனைமுடி (ஆ) தொட்டபெட்டா

(இ) மகேந்திரகிரி (ஈ) சேர்வராயன்

The highest Peak in Tamil Nadu is __________.

(a) Anaimudi (b) Doddabetta

(c) Mahendragiri (d) Servarayen

11. நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் __________ ஆவார்.

(அ) குடியரசுத் தலைவர் (ஆ) தலைமை நீதிபதி

(இ) பிரதம அமைச்சர் (ஈ) அமைச்சர்கள் குழு

The Constitutional Head of the Union is :

(a) The President (b) The Chief Justice

(c) The Prime Minister (d) Council of Ministers

12. ஒபெக் (OPEC) என்பது :

(அ) சர்வதேச காப்பீட்டு நிறுவனம்

(ஆ) ஒரு சர்வதேச விளையாட்டுக் கழகம்

(இ) எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின் அமைப்பு

(ஈ) ஒரு சர்வதேச நிறுவனம்

OPEC is :

(a) An International Insurance Company

(b) An International Sports Club

(c) An Organisation of Oil Exporting Companies

(d) An International Company

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

13. முதன்மை துறை ________ ஐ உள்ளடக்கியது.

(அ) வேளாண்மை (ஆ) தானியங்கிகள்

(இ) வர்த்தகம் (ஈ) வங்கி

Primary Sector consists of :

(a) Agriculture (b) Automobiles

(c) Trade (d) Banking

14. கருப்பு பணத்திற்கான காரணங்கள் என அடையாளம் கண்டறியப்பட்டவை எவை ?

(அ) பண்டங்களின் பற்றாக்குறை (ஆ) அதிக வரி விகிதம்

(இ) கடத்தல் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

What are identified as causes of Black Money ?

(a) Shortage of goods (b) High tax rate

(c) Smuggling (d) All of the above

## பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **10x2=20**

**Note :** Answer **any 10** questions. Question No. **28** is **Compulsory**.

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக.

Mention the countries in the Triple Entente.

16. மார்ஷல் திட்டம் என்றால் என்ன ?

What is meant by Marshall Plan ?

17. இராமலிங்க அடிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறு குறிப்பு எழுதுக.

Write a note on reforms of Ramalinga Adigal.

[ திருப்புக / Turn over

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

18. பாளையக்காரர்களின் கடமைகள் யாவை ?

What were the duties of the Palayakkarars ?

19. வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.

List out the territories annexed by the British under the Doctrine of Lapse.

20. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைக் குறிப்பிடுக.

Mention the West flowing rivers of India.

21. வளத்தை வரையறுத்து, அதன் வகைகளைக் குறிப்பிடுக.

Define Resource and mention its types.

22. இடப்பெயர்வு என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

What is migration ? Mention its types.

23. தேரி – என்றால் என்ன ?

What is meant by "Teri" ?

24. குடியுரிமை என்பதன் பொருள் என்ன ?

What is meant by Citizenship ?

25. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் யாவை ?

What are the qualifications for appointment as a Governor ?

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

26. பஞ்சசீல கொள்கைகளில் ஏதேனும் நான்கினைப் பட்டியலிடுக.

List any four guiding principles of Panchsheel.

27. வரி – வரையறுக்கவும்.

Define Tax.

28. தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்களை எழுதுக.

Write names of some Nutrition Programmes in Tamil Nadu.

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **42** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **10x5=50**

**Note :** Answer any **10** questions. Question No. **42** is **Compulsory.**

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(i) கட்டபொம்மன் _________ என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.

(ii) ''நவீன சீனாவின் தந்தை'' என்று அழைக்கப்படுபவர் _________ ஆவார்.

(iii) 'ஒரு பைசாத் தமிழன்' பத்திரிகையைத் துவக்கியவர் _________ ஆவார்.

(iv) காந்தியடிகளின் அரசியல் குரு _________ ஆவார்.

(v) _________ தமிழ் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

Fill in the blanks.

(i) Kattabomman was hanged to death at _________.

(ii) _________ was known as the Father of Modern China.

(iii) 'Oru Paisa Tamilan' newspaper was started by _________.

(iv) Gandhi regarded _________ as his Political Guru.

(v) _________ gave prominence to Tamil Music.

[ திருப்புக / Turn over

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

30. 19 ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.

Discuss the circumstances that led to the Reform Movements of 19th century.

31. தமிழ்நாட்டினுடைய சமூக மாற்றங்களுக்கு ஈ.வெ.ரா பெரியாரின் தீர்மானகரமான பங்களிப்பை மதிப்பீடு செய்யவும்.

Estimate Periyar EVR's decisive contribution to the social transformation of Tamil Nadu.

32. (அ) வேறுபடுத்துக :

(i) வானிலை மற்றும் காலநிலை

(ii) புதுப்பிக்க இயலும் மற்றும் புதுப்பிக்க இயலா வளங்கள்

(ஆ) காரணம் கூறுக.

கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

(a) Distinguish between :

(i) Weather and Climate

(ii) Renewable and Non-Renewable Resources

(b) Give reason for :

Eastern Ghats are not a continuous range.

33. இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிட்டு மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரிக்கவும்.

State any five types of soils in India and explain the characteristics and distribution of Soil.

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

34. இந்திய தொழிலகங்கள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்கள் பற்றி எழுதுக.

Describe the major challenges of Indian Industries.

35. தமிழ்நாட்டின் நீர் ஆதாரங்களைப் பற்றி எழுதவும்.

Write an account on Water Resources of Tamil Nadu.

36. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

Explain the salient features of the Constitution of India.

37. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரிக்கவும்.

Describe the powers and functions of the Chief Minister.

38. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரிக்கவும்.

Briefly explain various terms associated with measuring of National Income.

39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.

Write the challenges of Globalization.

40. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை ?

What are the important characteristics of successful industrial cluster ?

[ திருப்புக / Turn over

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

குறிப்பு : மாற்றுத்திறனாளி மாணவர்கள் காலக்கோடு மற்றும் வரைபடத்தில் நிகழ்வுகளையும் இடங்களையும் குறிப்பிட்டுக் காட்டுவதற்கு பதிலாக அவற்றைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்.

**Note :** Differently abled candidates have to write only notes for the questions related to Timeline and Map.

**41.** கீழ்காண்பவற்றிற்கு காலக்கோடு வரைக.

1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் எழுதுக.

Draw a Timeline for the following.

Write any five important events between 1930 and 1950 in the Timeline.

**42.** உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.

(i) ஜப்பான் (ii) பிரான்ஸ் (iii) ரஷ்யா

(iv) மொராக்கோ (v) இங்கிலாந்து

Mark the following places on the outline Map of the World.

(i) Japan (ii) France (iii) Russia

(iv) Morocco (v) England

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **2x8=16**

**Note :** Answer the following questions.

**43.** (அ) சட்ட மறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கினை விவரிக்கவும்.

அல்லது

(ஆ) இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.

(a) Describe the role of Tamil Nadu in the Civil Disobedience Movement.

**OR**

(b) Classify and explain the roadways in India.

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

குறிப்பு : **மாற்றுத்திறனாளி** மாணவர்கள் வரைபட தொடர்புடைய வினாக்களுக்கு குறிப்புகள் மட்டும் எழுதவும்.

**Note :** **Differently abled** candidates have to write only notes for the questions related to Map.

**44.** (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) தார் பாலைவனம்

(ii) தக்காண பீடபூமி

(iii) மலை காடுகள்

(iv) தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை

(v) பருத்தி விளையும் பகுதிகள்

(vi) அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள்

(vii) பன்னாட்டு விமான நிலையம்

(viii) இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம்

**அல்லது**

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.

(i) மன்னார் வளைகுடா

(ii) நீலகிரி

(iii) காவிரி ஆறு

(iv) காபி விளையும் பகுதி

(v) முக்கிய கடல் துறைமுகம்

(vi) கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம்

(vii) வங்காள விரிகுடா

(viii) சென்னை

[ திருப்புக / Turn over

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377

(a) Mark the following places on the given outline Map of India.

(i) Thar Desert

(ii) Deccan Plateau

(iii) Mountain Forest

(iv) Direction of South West Monsoon Wind

(v) Areas of Cultivation of Cotton

(vi) Andaman and Nicobar Islands

(vii) International Airport in India

(viii) State of high literacy in India

**OR**

(b) Mark the following places on the given outline Map of Tamil Nadu.

(i) Gulf of Mannar

(ii) Nilgiri

(iii) River Cauvery

(iv) Coffee growing region

(v) Major sea port

(vi) Point Calimere Wildlife Sanctuary

(vii) Bay of Bengal

(viii) Chennai

- o O o -

GREEN GARDEN MATRIC. HR. SEC. SCHOOL
Perundurai R.S.
PH: 9486379461, 8344933377